# குலமலர்



ச. அமிர்தநாதர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kula malar

# குலமலர்

—காவியம்—

ஆக்கியோன்:

ச. அமிர்தநாதர். AMIRTANADAR

VIJAYALUCKSHMI BOOK DEPOT
BOOK SELLERS & STATIONERS
248, GALLE ROAD,
WELLAWATTE
COLOMBO - 6

275526

கலை மன்ற வெளியீடு
நுவரெலியா.

275526
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமர்ப்பணம்:**

என்னில்
என் புனிதமான
நினைவுகளில், உணர்வுகளில்
கலந்து
நான் நானாக
வாழ வழி ஈந்து, வாழும்
என் அருமைத் தாய் தந்தையர்க்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு: 1969

படிகள்: 1000

உரிமை ஆசிரியருக்கே.

அச்சுப் பதிவு:-

அசோகா அச்சகம்,
இருகலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

நயந்தேன், நல்கின்றேன். குற்றங் களைந்து குணங்காணும் நற்றமிழ் உலகு என்பது என் நம்பிக்கை.

இந்நூல் கலை மன்றத்தினரின் வெளியீடாகும். கல்வி, கலை, கலாச்சாரம் என்பவற்றைத் தமது குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றி வரும் நுவரெலியாக் கலை மன்றத்தார்க்கு என் கனிவான நன்றி.

அன்புடன் அணிந்துரை நல்கி ஆக்க முயற்சிகளுக்கான ஊக்க மளித்த கலாநிதி க. கைலாசபதி அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி என்றும் உரியதாகுக.

ச. அமிர்தநாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் முதல் வெளியீடு.

# அழகு

—கவிதைத் தொகுதி—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**கலாநிதி க. கைலாசபதி அவர்கள்**
தமிழ்த்துறை விரிவுரையாளர்
இலங்கைப் பல்கலைக் கழகம், கொழும்பு.

தமிழ்க் கவிதைப் பயிர் தென்னிந்தியாவினும் ஈழத்திலே செழித்து வளர்கிறதென்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்படும் உண்மை. சமீப காலத்தில் இங்கு வெளிவந்த கவிதைத் தொகுதிகளை நோக்கும் போதும், நாட்டின் பல பகுதிகளில் நடைபெறும் கவியரங்குகளிலே ஒலிக்கும் பாடல்களைக் கேட்கும் போதும் பாரதி பரம்பரை உயிர்த்துடிப்புடன் இயங்குவதை உணர்தல் கூடும்.

திரு. அமிர்தநாதர் இப்பரம்பரையில் இடம் பெறுபவர்; இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்; ஏழெட்டு ஆண்டுகளாக இத்துறையில் முயற்சிகள் செய்து வருபவர். இக்கால எழுத்தாளர் பலர் இலக்கியப்பிரிவுகள் அத்தனையிலும் கையிட்டுப் பார்ப்பதுண்டு. எல்லாருக்கும் எல்லாம் கைவருவதில்லை. இவ்வுண்மையை உணர்ந்தோ என்னவோ, அமிர்தநாதர் கவிதை புனைவதையே தனது பொழுது போக்காகவும் இலக்கிய முயற்சியாகவும் கொண்டுள்ளார். எக்கலைக்கும் முயற்சியும் பயிற்சியும் இன்றியமையாதவை அன்றோ. எழுத்தார்வம் உடைய ஓர் இளைஞர் சிறுகதை, நாடகம் முதலியவற்றை எழுதும் ஆசையை வென்று கவிதை மாத்திரம எழுதும் நோக்க முடையராயிருப்பதே பெரியதொரு சாதனை என்று எனக்குத் தோன்றியது. அன்பர் அமிர்தநாதரின் கவிதைப் பற்று பாராட்டுதலுக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கால இளங்கவிஞரை இருபெருங் குழுவின ராய்ப் பாகுபடுத்தலாம். பொதுவாகப் பழைய இலக் கியங்களிலும், குறிப்பாக பாரதி, தேசிகவிநாயகம் பிள்ளை, பாரதிதாசன் முதலியோர் கவிதைகளி லும் அமைந்துள்ள பொருள்களைப் பின் பற்றி 'இலக்கிய' நயம் கருதிப் பாடல்கள் எழுதுவோர் ஒரு சாரார்; தற்காலச் சமுதாய இயக்கங்களையும் மாற்றங்களையும் அடிநாதமாகக் கொண்டு "நாட்டு மக்கள் நலமுற்று வாழவும் நானிலத்தவர் மேனிலை எய்தவும்" பாட்டிசைப்பவர் இன்னொரு சாரார்: இயற்கைபற்றிப் பாடுவோர் என்றும், சமுதாயம் பற்றிப் பாடுவோர் என்றும் இவர்களை முறையே வழங்குதல் பொருந்தும். திரு. அமிர்தநாதர் முந்திய பிரிவில் அடங்குபவர். அழகு என்ற கவிதைத் தொகுதியில் (1965) 'சமூகம்' என்னும் பகுதியிற் சில பாடல்கள் காணப்படினும் ஆசிரியரது கருத்தும் கவனமும் உணர்ச்சியும் உத்வேகமும் இயற்கை பற்றியே யிருக்கக்காணலாம். தேசிகவிநாயகம்பிள்ளை, நாமக்கல்லார் ஆகியோரின் சாயல் அமிர்தநாதர் கவிதைகளில் ஆங்காங்கு சாடைகாட்டுகிறது

இப்பொழுது வெளிவரும் கதைப்பாடலிலும் "இயற்கையின் எழிற் கோலங்களே" (பக். 17) சிறப் பிடம் பெறுகின்றன. காதல், மனைமாட்சி, கலையுணர்வு, குழந்தையின்பம் முதலியன கவிக்கனவாக இக்கற்ப னைப் பாடலில் ஒளிர்கின்றன. இலக்கியங்களைப் படித் துச் சுவைத்த இன்ப நினைவு இத்தகைய கவிதை களின் ஊற்றுக்கண் எனலாம்.

காலப் போக்கில் ஆசிரியரது கவிப் பொருள் விரிவடைந்து, நடைமாத்திர மல்லாது நோக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்தோங்க வேண்டும் என்று விரும்புகிறேன். கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பைத் தரவல்லது கவிதை; அதன் உள்ளார்ந்த ஆற்றல் உலகமளாவியது. இவ்வுண்மையை உளங்கொண்டு மென்மேலும் நூல்கள் வெளியிடுவார் என நம்புகிறேன்.

க. கைலாசபதி

UNIVERSITY OF CEYLON
-4 JUN
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொழி வாழ்த்து

திருமலி சிறப்பினைத் தீஞ்சுவை அமிழ்தினைப்
பொருவில் பொருளினைப் பொன்றா நலத்தினை
அருந்திறற் கலையினை உலகளாவிய நெறியினை
அருளிநின் றிலங்குவை அன்னாய்! வாழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குலமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகூட்டும் உள்ளம்.

எங்கும் புதுநிலவு ஏற்றும்
எழிற் கோலம்:
பொங்கிப் புரள அதில்
புதைந்திருந்த திஞ்ஞாலம்;
பூவிரியும் சோலைப் புதுமணத்தைத்
தென்றல் அள்ளிப்
பார் முழுதும் மெல்லப்
பரப்பி வரும் வேளை:
கண்ணுறங்கும் நேரம்;
கண்ணுறங்காதோர் இளைஞன்
எண்ண அலைகள் இதயத்தைச்
சுண்டி விடத்
தன்னை மறந்து தனித்திருந்தான்
மணற் பரப்பில்:
சின்ன அழகேனும் அவன்
சிந்தைதனைத் தீண்டவில்லை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தன் எனும் பெயரோன்
கலையுணர்வு வாய்ந்தோன்
மாந்தர் துயர்க் இரங்கி அவை
மாற்றுந் துடிப்புடையோன் :
எல்லார்க்கும் நல்லோன்;
இனிய தமிழ்ப் பண்பாளன்
கல்லாத பேர்க்கும் அவன்
கருத்தினிக்குந் தேனுக:
அறங் கிடந்த நெஞ்சும்
அறிவு நலங் கொண்டும்
திறம் படவே தொண்டாற்றும்
தீரா விருப்புடையோன்:
பாச்சுமந்து நல்ல பயன் சுமந்து
பாய்ந் தோடும்
காவிரியைப் போல
கருத்துக்கள் காந்தனிடம்;
ஏட்டில் எழுதிடுவான்
எங்கும் எடுத்துரைப்பான்.
தீட்டும் உரை யாவும்
சிந்தை கொள்ளின் 'பொன்வாழ்வு.'
இறப்புக்கும் பிறப்புக்கும்
இடைச் செய்யும் தொண்டே
சிறப்பான வாழ்வு! அது
தீந்தமிழர் சொத்தாகும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில் சில பேர்கள்
மாதர் அறம் பேணுது
கண்ணின் விருந்தாக்க்
காட்சிப் பொருளாகப்
பெண்ணினத்தை ஆக்கும்
பேதமைக்காய் நொந்து
பெண்ணின் பெருமை யெல்லாம்
பேசும் அவன் நெஞ்சு:
வண்மை சேர் மாதர் அறம்
வையத்தில் பெரிதன்றோ!
திண்மை மிகு நல்லறங்கள்
சேர்ப்பவர் தெரிவையரே!
ஒளவை இளவெயினி
அழகுத் திலகவதி
கொவ்வை இதழாள்
கோவலனின் கற்பரசி
காவியங்கள் போற்றும்
கன்னித் தமிழ்ப் பெண்குலமே!
ஆவியதிற் கலந்து
அளிப்பீர் பெருவாழ்வு!
கலை பூத்து நல்ல கவின்
பூத்த செந்தமிழின்
நிலையான நிறைதோய்ந்த
இலட்சியப் பெண் இன்றெங்கே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாய், பழங்கதையாய்ப்
போனதுவா தாய்மை!
உய்ய வழி ஏது? ஓங்கும் அறமேது?
வையத்தில் வாழ் வேது?
தாய்க்குலப் புகழ் பொலியத்
தண்மையொளி வீசாதா ?
போய்ப் புகுவதா பெண்மைப்
பொருள் யாவும்? இல்லை! இல்லை!
சத்தியத்தைக் காத்து மனிதத்
தன்மைக் குயர்வூட்ட
உத்தமிகாள் எழுமின் என
ஓதும் அவன் உணர்வு.

பேதங்கள் ஏது? வீண்
பிளவு சண்டை ஏது இங்கு
வேதங்கள் கூறும் மேன்மை
நெறி கண்டுவிடின்;
அன்பு துணைக் கொண்டால்
யாவும் இனிமை தரும்
பண்பு பெருகும், பாரில்
மானிடம் ஓங்கும்:
எவ்வளவு காலம்
இருந்தோம் என்பதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி நாம் வாழ்ந்தோம்
என்பதையே தேர்மின்!
வாழ்வின் பயன் உணர்ந்து
வாழப் பிறர்க்குதவி
நாளைப் பயன் உடைத்தாய்
நாம் கழிப்பதே மேல்!
காந்தன் உள்ளத்தே
கனிந்த கருத்திவைகள்:
மீண்டும் அவன் உணர்வு
மிதக்கும் இயற்கைதனில்.

கொஞ்சுகின்ற தென்றல்
குலவுகின்ற பூங்கொடிகள்
அஞ்சி ஓடும் மான்கள்
அழகு நிலா செவ்வானம்
பூமிதனில் காணும்
புதுமை எழில் யாவும்
ஒவ்வொன்ருய்ப் பார்த்து
உவக்கும் அவன் உள்ளம்.
கண்ணைக் கவர்ந்து
கருத்தை யீர்க்கும் அழகில்
உண்மை இறைவன்
ஒளியையே கண்டிருப்பான்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளக் கருத்தால் உயர்ந்த
குணக்காந்தன்: பலர்
உள்ளம் புகுந்தான், அவன்
உள்ளத்தில் சாந்தி சென்றுள்:
காந்தனின் பண்பு
கவர்ந்த தந்தப் பூங்கொடியை
காந்தனுக்கும் அவ்வாறே;
கவர்ந்த தவள் பெண்ணழகு.
எளிமைக் குணமும்
இன்முகமும் அன்பும்
நளின உணர்வும் உள்ள
நல்ல தமிழ்ப் பைங்கொடியாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோழியருடன் சாந்தி.

பட்டின நாகரிகம் எட்டிப்
பார்க்காத கிராமம்: கண்ணுக்
கெட்டிய தூர மெல்லாம்
இயற்கையின் எழிற் கோலங்கள்.

மாந்தோப்பிற் குயில்கள் பாடும்,
வயலெல்லாம் செந்நெல் சாயும்
பூஞ்சோலை புகுந்த தென்றல்
புது மெருகேறி மீளும்.

மண் வளமுள்ள சிற்றூர்
மக்களின் மனம் போற் பூமி
பொன்வளம் சுரந்து நல்கிப்
பொலிந்திடும் திருமகளாய்.

சாலையின் மருங்கின் தோப்பில்
சாந்தியின் பெற்றோர் இல்லம்;
காளையாம் காந்தனும் இக்
கிராமத்தின் இளைஞனவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் எழுந்து வீட்டுக்
கடமைகள் முடித்துச் சாந்தி
சாலையின் அயலே வயல்
தடாகத்தில் நீர்க்குப் போவாள்:

மாந்தளிர் உடலில் காலை
வயங் கொளி காந்தமேற்றும்
சூழ்ந்திடும் தோழியர் வாய்ச்
சொல்லெலாம் சிரிப்பாய்ச் சிந்தும்.

நீலப் பூ விழிகள் இரண்டும்
நீந்திடும் எழிலை நாடி
கோலச் சிற்றிடை நுடங்கும்
குடத்து நீர் பாரத்தாலே:

தென்றலில் ஒல்கி ஒல்கித்
திளைத்திடும். மலர்க் கூட்டமாம்
பைந்தொடி மாதர் நடை
பார்வைக்கு விருந்ததாகும்:

புனல் மொண்டு மீழு முன்னே
பொய்கையில் குளிப்பார்; சிலர்
பனிமலர் அழகு பார்த்துப்
பக்குவமாகக் கொய்வார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்கையில் அன்னமாகப்
புது மலர்க் கூட்டமாகத்
தையலார் மூழ்கும் காட்சி
தைத் திங்கள் நீராட்டாகும்:

பரிபாடல் காட்டும் வைகைப்
பைந் தொடியர் நீராட்டாய்
விரிமலர் அளைந்து எற்றி நீர்
விளையாட்டில் திளைப்பர் சிலர்.

மலரென முகம் சிரிக்கும்
மணங்கமழ் நீருள் பூக்கும்
கயலெனப் புரளும் தடாகக்
கரையெல்லாம் மலர்க் காடாகும்!

குளிர் புனல் தடாகத்துள்ளே
குல மலர்ப் பெண்கள் ஆடி
விழிமலர் செம்மலராய்
விரைகுவர் துறையை நோக்கி:

சிந்தையில் வந்ததெல்லாம்
சிரிப்பினுக் கிடையே சொல்வார்,
விந்தையாய்க் குறும்புக்காக
விருப்பியே கேலி செய்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தனின் எழுத்துப் பற்றி, அதிற்
　　கனிந்திடும் நயங்கள் பற்றிச்
சாந்தியின் மனதைத் தூண்டும்
　　சாடையில் ஏதோ சொல்வார்:

நல்லியற் தோழியர்கள்
　　நயவுரை எல்லாம் கேட்டு
மெல்லியள் சாந்தி உள்ளம்
　　மிதந்திடும் இன்ப ஊற்றில்:

போகின்ருர் கன்னிப் பெண்கள்
　　புனல் மொண்டு; புதுமை பூண்டு
வீதியின் மருங்கில் உள்ளோர்
　　விழியெல்லாம் அவர் மேற் செல்ல;

கதிரொளி வயலில் பாயும்
　　காந்தனின் அழகுக் கண்கள்
சதிரிட்டு மெல்லத் தாவும்
　　சாந்தியின் அழகு மாந்த;

உணர்வொத்த தூய உள்ளம்
　　ஒன்றினை ஒன்று தாவும்
நினைவுகள் மின் வெட்டாக
　　நெஞ்சினில் இனிமை பூக்கும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரின் எண்ணங் கூட
இல்லற இன்பந் துய்க்கத்
திருமணம் கண்டார் வாழ்வு
சிறந்தது பண்பு ஓங்க:

இல்லறப் பண்பு பூண்டு
இலங்கினுள் சாந்தி; அவள்
சொல்லருங் குணங்கள் கண்டு
சுவைத்தனன் கவிதையாக:

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்லற வாழ்வு

அன்பு க்னிய அறம் மலர —நல்ல
ஆனந்தம் பொங்கி மனை நிரம்ப
பண்பு செழிக்கப் பயன் நிறைய —இவர்
பாங்குடன் இல்லறம் ஓம்பினர்காண்:

புன்னகை பூத்துப் பணிபுரிவாள் —சாந்தி
போக்கிடுவாள் மனப்பார மெல்லாம்;
கண்ணெனத் தன்துணை போற்றிடுவாள் —தமிழ்க்
காவியமாய் வாழ்வை ஆக்கிடுவாள்.

முந்தையர் கண்ட செம்வாழ்க்கைமுறை —யாவும்
முற்று மறிந்த இத் தம்பதிகள்; அதைச்
சிந்தையிலே கொண்டுவாழ்ந்தனர் —இல்லறம்
சிக்கனம் தோய்ந்து சிறந்ததுவே!

செல்லும் விருந்தினர் ஓம்பிடுவார் —அதில்
செந்தமிழ் பண்புகள் சேர்ந்தினிக்கும்:
வெல்லும் மனைமாட்சி: சாந்தி பணியாவும்
மேவிடும் பெண்மைக் குணம் விரியும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னும் பொருளு மில்லாவிடினும் —யாவும்
போதும் என்ற மனம், அன்புக்குணம்
என்னென்ன துன்பங்கள் வந்திடினும் —அதை
இன்முகத் தோடேற்கு மினிய நெஞ்சம்:

காந்தனின் உள்ளக் கருத்துக்கள் —வாழ்ந்திட
கைகொடுப்பாள், கருத்தாய் அமைவாள்
சாந்தி அவன் மனச் சாந்தி —அடைந்திடத்
தன்னையே தொண்டினிற் கர்ப்பணிப்பாள்:

இதயம் குளிர்விக்கும் தென்றலாவாள் —பிறர்
ஏங்கிடும் துன்பம் ஏதும் சகியாள்:
எதிலும் எளிமை விரும்பிடுவாள் —தனது
இல்லத்தில் அன்பொளி ஏற்றிடுவாள்:

உண்ணக் கொடுத்து உவந்திருப்பாள் —காதல்
உள்ளத்தை அன்பால் கனிய வைப்பாள்:
எண்ணுங் கருமங்கள் எல்லாம் —பொதுநன்மை
இல்லத்தாள் மாண்பிற்கு ஏது இணை!

தெள்ளு தமிழ் குறட் பாவினில் —செப்பிய
சீரிய வாழ்க்கை முறை தேர்ந்து
எல்லார் மனத்தும் இனியராய் —வாழ்ந்தனர்
இன்பம் அவர் வாழ்வில் பொங்கியது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சினில் சாந்தி நிறைந்திருப்பாள் —அவன்
நேர்வழி எல்லாந் துணையிருப்பாள்;
கொஞ்சும் தமிழ்ச் சுவை அள்ளிக் கொடுத்து —நற்
குலக் கொடியாக மலர்ந்திருப்பாள்;

காந்தன் எழுத்தில் புதுமை பொங்கும் —புதுக்
கருத்துக்கள் முத்தெனவே இலங்கும்.
மாந்தர் சிறந்து மகிழ்ந்திடவே —என்றும்
வாழும் படைப்புக்கள் ஆக்கிடுவான்:

உள்ளுணர் வொன்றிய காதலினால் —அவர்
ஓருயிர் கொண்டு உலவிடுவார்:
வெள்ளை மனமும் நற்பிள்ளைக்குணங் —கொண்டு
வேண்டிய தொண்டு புரிந்திருப்பார்:

செந்தமிழ் நாட்டில் "தமிழ் விழா" என்ற —ஓர்
செய்தி அறிந்து மனம் மகிழ்ந்து
பைந்தமிழ் மாண்பையும் நாட்டின் —சிறப்பையும்
பார்த்திட ஆவலோடேகினரே:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பதிகள் கண்ட தமிழ் மாநாடு.

ஆன்ற விந்தடங்கிய புலமை
அருங்கலைச் சான்றோர் கூடித்
தீந்தமிழ் அமுது மாந்திச்
செய்யும் ஆராய்ச்சி காண
மாந்தர்கள் சூழ்ந்தார் கோடி
மகிழ்ச்சிக்கோர் எல்லை ஏது?
பாய்ந்தது தமிழின் இன்பம்
பரந்தது உலக மெங்கும்.

ஈழ நாட்டறிஞர் பலர்
எழுத்தாளர் கலைஞர் இன்னும்
மேலைநாட்டறிஞர்; தமிழ்
விளங்கிடும் பன்னாட்டாரும்
காலமாய்த் தாங்கள் கண்ட
கருத்தெல்லாம் விருந்து வைக்க
ஆவலாய்க் கூடினார்கள்
அழகிய தமிழ் நாட்டின் கண்:

275526

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான் முட்டும் கொடிகள்; வீதி
மனையெலாந் தோரணங்கள்;
தேன் முட்டிச் சிலிர்க்கும், மாந்தர்
செந்தமிழ் நெஞ்சம் யாவும்:
மீன் ஒத்த விளக்கின் சோதி
வித விதம் அலங்காரங்கள்;
ஊன் உளம் புகுந்து நின்று
உலவிடும் தமிழ் உணர்ச்சி;

படைத் திறனுக்கோர் காட்சி
பண்பிற்கோர் காட்சி; நல்ல
கொடைத் திறனுக்கோர் காட்சி;
குணத்துக்கோர் காட்சி,
நடைத் திறனுக்கோர் காட்சி
நங்கை கற்பிற்கோர் காட்சி
இடையே ஊர்வலக் காட்சிகள்
எல்லாமே தமிழின் மாட்சி!

காவியக் காட்சி யாவும்
கண் முன்னே தோன்றும்; நல்ல
ஓவிய உருவில்; சிந்தை
ஒன்றியே அதில் திளைக்கும்:
நீவிடும் நெஞ்சந் தன்னை, அங்கு
நிலை பெற்ற சிலைகள் யாவும்;
மேவிடும் தமிழ்ப்பெருமை
மேதினி வியக்கும் வண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைந்தமிழ்ச் சீர் சிறப்பு
பண்டைய நாகரீகம்
முந்தையோர் ஆட்சி; நீதி
முறையோடு வீரம் செல்வம்,
சிந்தையில் நிலைத்து வாழும்
தீந்தமிழ்க் கருவூலங்கள்
வந்திருந்தோர் யாவர்க்கும்
வழங்கினார் பேரறிஞர்:

தீராத தமிழ் ஆர்வத்தால்
செந்தமிழ்த் துறைகள் ஆடி
ஆராய்ந்து முடிவு கண்டோர்
அதை எடுத்தியம்பி நிற்பார்.
நேரான நெறி அளாவி
நிமிர்ந்திடும் அறிவின் ஆற்றல்!
ஆராத இனிமை சிந்தும்
அவையுள்ளோர் புதுமை காண்பார்.

நாவலர் சொற் பெருக்கில்
நயங் கொஞ்சும்; தமிழ் கனிந்து
பாவலர் பாட்டில் கொஞ்சும்
பழம் புகழ் வரலாறுகள் தமிழ்க்
காவலர் ஆய்வில் கொஞ்சும்
கருத்தெல்லாம் ஓங்கி நின்று
ஆவலாய்க் கேட்போர் உள்ளம்
அமுதெனக் கொஞ்சி வாழும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல் பொருள் நயங்கள் ஆயச்
சேருவார் ஓர் மன்றத்தில்
நல்லிசை நாடகங்க்ள்
நடந்திடும் ஓர் மன்றத்தில்
பல்லிசைக் கவிதை நாவல்
படிப்பெழும் ஓர் மன்றத்தில்
தொல் பொருள் விளக்கம் ஆய்வு
தொடர்ந்திடும் ஒவ்வொன்ருக:

நுட்பமாய்ப் பொருள் மலரும்,
நுழை புலன் கொண்டறிஞர்
திட்பமாய் நிறுவும் ஆய்வு
தேனுகும் தமிழ்ச் சிந்தைக்கு;
கட்புலன் கதுவும் எல்லே
கடந்திட்ட உண்மை யாவும்
செப்பமாய் உரைப்பர் எல்லாம்
செந்தமிழ்ச் செல்வ மாகும்:

காவியம் செய்வோம், நல்ல
கலேச்சொற்கள் ஆக்கிடுவோம்
பூவினில் தமிழ் செழித்து
புதுமை பூத் தொளிரச் செய்வோம்
ஆய்வுகள் புதிதாய்க் காண்போம்
''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' எனும்
சீரிய கொள்கை மேலும்
செழித்திடச் சிறப்போம்' என்ருர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமையின் பெருமை, உயர்
பண்பாட்டின் ஒற்றுமை யோடு
புதுமையின் மிளிர்வு சேர்ந்து
புத்துணர் வளித்து நிற்கும்;
திறமைகள் செயல்கள், ஏனைத்
திருப்பங்கள் ஒருங்கு கூடும்;
அருமையின் வைப்பே! தமிழ்
அடைந்திடும் சிறப்பே யாவும்!

கண்டனர் பெருவிழாவைக்
காந்தனும் அவன் துணையும்
உண்டனர் தமிழ் அமுது
உவகை மேலீட்டால் மற்றும்
தண்டமிழ்க் கலைச் செல்வங்கள்
தலங்கள் வரலாற்றிடங்கள்
பண்டைய பெருமை எல்லாம்
பார்த்திட விரைந்து சென்றார்:

❖

திருத் தலங்கள் சந்தித்தார்
தென்னாட்டின் சிறப்பெல்லாம்
கருத்திலிக்கப் பார்த்ததில்
கலந்து மகிழ்ந்திருந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வகளை சொட்டும்
சிற்பக்கலை வண்ணத்தை
'மல்லை' என்று பாடல் பெற்ற
மாமல்ல புரத்திற் கண்டார்:

சிற்பக்கலை வழங்கும்
சிறந்த கவின் எழிலை
அற்புதமாய்க் கண்டு
அதிலே திளைத்து நின்றார்:

கோவில் பல சென்று
கும்பிட்டு பூசை செய்தார்:
தூய கலை வடிவு அங்கும்
தொடர்ந் தினிக்கும்.

சென்னைக் கடற்கரையில்
தென்றலாடி இருந்தார்:
முன்னைப் பெருமை எல்லாம்
மொழிந்தான் அவள் மகிழ:

ஆற்று முகப் பட்டினங்கள்
அழிந்த துறை முகங்கள்
போற்றுவார் இன்றிப்
புதைந்த கலைச் செல்வங்கள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்து சிறந்த
உலக வணிகப் பொருட்கள்
ஒவ்வொன்றாய்க் கூற
உவந்திருந்தாள் சாந்தி அங்கு:

பாண்டி நாட்டிருந்த
பண்டைய துறை முகங்கள்
மாண்ட கொற்கை, காயல்,
வளங்கள் எடுத்துரைத்தான்:

''தென்னாடு முத்துடைத்து'' என்ற
சிறப்பைப விரித்துரைத்தான்.
முன்னாள் வணிகத்தின்
முறை கேட்டவள் வியந்தாள்:

மண்ணுக்குள் மூடி
மறைந்த முசிறி யையும்
பின்னுள்ள கொச்சி யையும்
பேச்சிடையே அறிந்தாள்:

சீர்த்த புகழ் மண்டிச்
சிறந்த புகார் நகரம்
ஆர்த் தெழுங் கடலின்
அடியில் உறங்கு தென்றான்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க இலக்கியத்தில்
சரித்திரத்தின் ஏடுகளில்
மங்கா தொளிர் தமிழ் நாட்டு
மாண் பறிந்து மீண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புப் புதையல்

இன்பமாய் ஊர் திரும்பும்
வேளை, உள்ளத்
தெழுந்த தெல்லாங் கலந்துரை
யாடி மகிழ்ந்தார்:
அன்புருவாய் அழியாது
நிற்கும் காதல்
ஆருயிரை, அதன் பிணிப்பை
ஆய்ந் துணர்ந்தார்.

இதயத்தின் துடிப்புணர்த்தி
இலங்கி நிற்கும்
எழில் மிகுந்த தாஜ்மகால்
தூய காதல்
புதையல்! என அதன்
சிறப்பை விரித்துரைத்தான்
புல்லரித்து உளம் குழையக்
கேட்டாள் சாந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதத்தின் அதிசயமாய்
ஓங்கி நின்று
அழிவற்ற உயர் அன்பின்
உணர்வை ஊட்டிக்
கற்பனைக்குள் அடங்காத
உயிர்க் காதலின்
கனிவாக மிளிரும் அத்
தாஜ்மகாலே!

துன்பத்தின் கீத ஒலி
தொனிக்க; மனச்
சுமை யாவும் தாஜ்மகால்
மீது கொட்டி
அன்புக்கு அமைந்த பெரும்
சின்னமாக
அமைத்திட்டார் ஷாஜகான்
அமைதி காண:

''நீர்க் குமிழி வாழ்வு'' என்னும்
நினைவையூட்டும்
நெஞ்சமெலாம் அன்பையெண்ணி
நெகிழச் செய்யும்;
பாருள்ளோர் புதுப் பாடம்
படிக்க வைக்கும்
பத்தினியாள் கதை கூறும்
பாங்கும் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாழ்க்கையிலே இதை விட
வேறென்ன வேண்டும்?
வாய்ந்த நல்ல காதலுக்கு
இலக்கணமாய்:
வாழ்க்கையிலே இத் தம்பதிகள்
பெற்ற பேறு
வையத்தின் பெரும் பேறு"
என்றுரைத்தாள்!

இறந்து விட்ட தன் துணைவி
மும்தாஜின் உயிர்
என்றும் நின்று துடித்தொளிரும்
இதயமாக
சிறந்த வாழ்வுத் திறன்
விளக்கும் சிற்பமாக;
தெய்வ வடி வாக்கிவிட்டார்
சிறப்பு என்னே!

"காதலினால் சாகாமல்
இருத்தல் கூடும்
கவலைபோம், அதனாலே
மரணம் பொய்யாம்" என்று
பாரதியார் பாடியதை
நினைத்தாள் சாந்தி:
பாசம் பொங்க விழி உணர்த்தப்
பார்த்தான் காந்தன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் நிறைந்து நின்றுள்
 மும்தாஜ்; காதல்
உலகினையே ஒளி செய்தார்
 ஷாஜகான், தன்
நல்ல குணப் பண்பாலே
 பெண்மை ஓங்கி
நயம் இயையப் புதுமை
 கண்டார், என நயந்தாள்

வாழ்ந்தாலும் ஒரு முறையே
 வாழ்வு: அன்பு
வளம் சுரக்கும் வாழ்வு பெறும்
 அமர நிலை!
மாண்டாலும் பெயர் சொல்ல
 வாழும் சாவு:
மலர்ந்த தெய்வீகக் காதல்
 மங்கு மாமோ?

பெண்மை பெறு வெற்றி யோடு
 ஷாசகானின்
பெரும் ஆண்மை இணைந்திலங்கும்
 பெற்றிகண்டு
எண்ண மெலாம் எழுந்தெழுந்து
 இதயம் தேங்க,
இனிய அன்பின் செயல்
 உரைத்து இன்புற்றுரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழலைச் செல்வம்.

பெண்மை கனிந்து நிறைவாகப்
பெற்ருள் சாந்தி, பெண்மகவு;
எண்ணம் கனிந்து இசைபாட
இதயம் மலர்ந்தனர் இருபேரும்.

பட்டு மேனி பனிமலரோ!
பாரில் எழிலின் சங்கமமோ!
கொட்டும் வடிவுக் கோலமெல்லாம்
கூடி விரிந்தன பொன்னுடலில்.

மலர்கள் சொரியும் புதுமுறுவல்
மனதைக் கவரும் சிறு விழிகள்;
நிலவாய் வந்து பெற்ரேர்கள்
நெஞ்சில் நிறைந்தாள் பொன்மலராய்!

உயிரில் நிறைந்து உறவாடி
உணர்வில் கலந்த அன்புச் சுவை
உயிராம் காந்தன் சாந்திக்கு
உள்ள செல்வம் அது ஒன்றே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லம் நிரப்பும் இன்ப ஒளி!
இதயம் தாவும் உயிர்த்துடிப்பு!
பிள்ளைக் கனியமுதின் வரவோ
பெற்றார் வாழ்வின் உயிரோட்டம்!

அமுதின் ஊற்றாய்த் தாம் பெற்ற
அன்பு மகளைத் தமிழ் மகளை
இதயக் கோவில் ஏற்றி என்றும்
இன்பப் பூசை செய்திடுவார்:

எண்ணி மகிழும் தாயுள்ளம்
எடுத்துப் பொன்னுடல் கண்பதிக்கும்:
கண்ணின் பாவை எனப் பேணிக்
கலைதேர் இன்பங் கண்டிருப்பார்:

தமிழின் சுவை யோடுறவாடும்
தாய்மை வடிவதில் நிழலாடும்:
இனிமை பூக்கும் இல்வாழ்வு
இன்பம்! இன்பம்! இருபேர்க்கும்!

இனிய தமிழின் கலையுணர்வு
ஈயும் மகவாய் அதைக் காண்பார்:
கனியைப் பாலைக் கற்கண்டைக்
கடந்து மழலைச் சுவை விஞ்சும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னக் குழந்தை தலை அசைத்துச்
சிரித்து மகிழும் போதெல்லாம்
அன்னை மகிழ்வாள்: அவன் மகிழ்வான்:
ஆயிரம் இன்ப நினைவு எழும்;

அழகிற் குளித்து வளர் மதியாய்
அன்பிற் குளித்து நாளாந்தம்
மதலைச் செல்வம் வளர்ந்திருப்பாள்;
மற்றென்றுண்டோ வாழ்வுப்பொருள்?

உண்ண அமுது ஊட்டிடுவாள்; தமிழ்
உணர்வும் இனிமையும் ஊட்டிடுவாள்:
பெண்மைக் குணமும் நற்பண்பும், சாந்தி
பிஞ்சு மனதில் பதியவைப்பாள்:

தத்தி நடக்கும் நடை அழகு
தவழும் போது அது அழகு
திக்கும் சுழலும் கண் அழகு
செய்யும் குறும்போ பேரழகாம்!

காதல் வாழ்வின் கண்மணியாய்க்
காந்தன் செல்வி நடைபயின்று
ஏதோ எல்லாம் கதை கதைப்பாள்
என்ன அர்த்தம் புது மொழிக்கு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' வருவாய் எந்தன் திரு மகளே!
வளர்வாய் பெண்மை நலம் பூண்டு
திருவாய்; பெண்ணின் திலகமதாய்ச்
சிந்தை மகிழ வாழம்மா!

ஆசைக் காதற் பூச்செண்டே
அழகே! எங்கள் ஆருயிரே!
பூசைக்கான மலராகப்
புதுமை பூண்டு பொலியம்மா!

மலர்ந்து நல்ல மணம் பரப்பி
மக்கள் சூடும் பூவாக
அலர்ந்து பெண்மைக் குணமெல்லாம்
அள்ளி அள்ளி வீசம்மா!

சின்ன மலரே! சிறு குழந்தாய்!
சிந்தைக் கினிக்கும் தமிழாக
உன்னைப் பெற்ற தாய் தந்தை
உள்ளங் குளிர வாழம்மா! ''

காந்தன் உள்ளம் தன்னுள்ளே
வாழ்த்தி மகிழும் கவிதையிது
சாந்திக் குயிராம் அவள் குழந்தை
சற்றும் பிரியாள் தனை மறப்பாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வில் மலர்ந்த நாவல்

இலக்கிய இன்பம் தோய
இன் சுவைத் தமிழ் மலரக்
கலைத்திறன் காட்டி என்றும்
காலத்தை வெல்லும் நாவல்
படைத்திடும் அறிஞருக்கோர்
பரிசு ''பத்தாயிரமாம்''
என ஒரு திட்டங் கண்டார்
இன் தமிழ்ச் சான்றோர் கூடி:

கருத்திலே புதுமை ஓங்கக்
காவியப் பண்பு ஓங்க
உளத்திலே உணர்வு பெய்து
உலகத்தின் மாண்பைக் காக்கும்
எழுத்திலே சிறந்தோரெல்லாம்
எழுந்திட்டார் எழுச்சி கொண்டு
கருத்திலே மலர்ந்த தெல்லாம்
காட்டிடத் துடித்து நின்றார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைந்தமிழ் நூல்க்ள் யாவும்
பக்குவமாக ஆய்வார்
எங்கெங்கும் சென்று நாவல்
எழுதுதற் கேற்ற சான்று
மங்கிய வரலாற்றுண்மை
மக்களின் சால்பு கண்டு
தங்களின் தேவைக் கேற்பத்
தரங் கண்டு சேகரிப்பார்:

ஏழைகள் குமுறல், கண்ணீர்
இலட்சிய வாழ்வு, தொல்லை
வாழ்விலே பணம் படைத்தோர்
வாழ்க்கையின் இரகசியங்கள்
தாழ்வுறுங் குணங்கள்; உணர்வைத்
தாக்கிடும் பிரச்சினைகள்
ஆழமாய் அறிந் தறிந்து
அவை யாவும் கருவாய்க் கொள்வார்.

ஆற்றலால் உணர்வால் வாழ்வில்
அடைந்த படிப்பினைகள் ஓர்ந்து
ஏற்றிடும் வண்ணம் புது
எழிற் கலைச் செவ்வி யூட்டிச்
சாற்றிட முனைந்து நிற்பார்
தமிழ் கூறும் நல்லுலகு
போற்றிடும் படியாய் இன்னும்
புதுக்கரு தேடி ஆய்வார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தனும் இப் போட்டியில்
கலந்திட விழைந்தான்: ஞால
மாந்தர்கள் உயிர்த் துடிப்பை
மனந்தனில் நினைந்தான்; அன்புச்
சாந்தியோ மனம் மலர்ந்து
தக்க நல்லுதவி ஈந்தாள்
வாய்ந்த நற் சூழ் நிலையில்
வளர்ந்தது நாவல் மெல்ல:

எண்ணங்கள் குவியும்; நல்ல
இதயங்கள் திறந்திருக்கும்
பண்ணிசை எழுப்பும் தமிழ்ப்
பழம் பெரும் வாழ்க்கையெல்லாம்:
கண்ணெனும் கலையின் ஈர்ப்பு
கலந்துறவாடும் நெஞ்சில்:
பெண்ணுள்ளம் நீதி பேசும்
பித்தாகும் அவனின் உள்ளம்:

காவிய மாந்தர் வாழ்வு
கதித்திடும்; கதைகள் கூறும்,
மேவியே தத்துவங்கள்
மிளிர்ந்திடும் கலைப்பண்போடு:
ஏவிடும் சாந்தி அன்பு
''எழுதுங்கள் எழுதுங்களென்று''
ஆவியில் தோய்ந்து நின்று
அரும்பிடும் புதுமை சேர்க்கும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையுணர் வளிப்பாள் சாந்தி
கருத்திலே மறைந்து நிற்பாள்:
நிலை சோர்ந்த நேரமெல்லாம்
நெஞ்சிலே உரம் அளிப்பாள்;
நிலையில்லா மனித வாழ்வில்
நிலைபெறும் நாவல் ஆக்க
விலையேது? அவள் தொண்டிற்கு
வியப்பிலே மிதப்பான் நம்பி!

ஏடுகள் படித்துச் சொல்வாள்
என்றுங் கண் விழித்திருப்பாள்
ஓடிடும் கால ஆற்றல்
உருக்குலைந் தழியாச் செம்மை
தேடியே மனிதர்க் காக்கும்
திறலுக்குத் திராணி யாகி
நாடிடும் உதவி செய்து குடும்ப
நலன் என்றும் காத்து நிற்பாள்:

வளர்ந்தது நாவல் சாந்தி
மனதினைப் போல ஓங்கி
சிறந்திடும் பொலிவில் மெல்லத்
திறந்திடும் இன் கண்ணூற்று
தளர்ந்திடா ஊக்க மீந்து
தன்னையே முழுது மீந்து
உயர்ந்தது பெண்மை! அதனை
உணர்ந்திட்டான் அவனும் நன்றாய்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சிடும் தாய்மை யுள்ளம்
குழந்தையின் நலனைக் காக்கும்
துஞ்சிடா திருந்து இல்லம்
துலங்கிடப் பணிகள் ஆற்றும்
எஞ்சிய நேரம் எல்லாம்
ஏதோ நற்செயற்கே ஆக்கும்
கொஞ்சமும் ஓய்வு இல்லைக்
குலக்கொடி தொண்டு என்னே!

தன் சுகம் துறந்து பழகு
தமிழ் நெறி நின்று நாளும்
இன் முகம் மலர்ந்து துணைவன்
எழுத்திற்கு ஆக்க மீய்வாள்:
என்னென்ன துன்ப மேனும்
இயம்பிடாள்: தம் குறிக்கோள்
பொன்னெனப் போற்றிக் காந்தன்
புகழ் காணத் துடித்திருப்பாள்:

பணவளம் குறைந்த வாழ்வைப்
பக்குவமாய் இயக்கி, நற்
குணம் ஒன்றே செல்வமாகக்
கொண்டு இங்கிதம் புரிந்து
கணமேனும் மனம் கோணது
கவலைகள் மறைக்கும் சாந்திக்
கிணை ஏது என்றுவந்து
ஏற்றியே இதயத்துள் வைப்பான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றன திங்கள் பல
சீரான உழைப்பால் நாவல்
நின்றது முடிவை நோக்கி
நிறைந்தன அன்புள்ளங்கள்:
அன்றொரு நாளில் சாந்தி
அயர்வுற்றுச் சாய்ந்தாள் கீழே
குன்றின மகிழ்ச்சி யாவும்
குமுறிய(து) காந்தன் உள்ளம்:

வைத்தியர் வந்தார்; சாந்தி
மயக்கத்திலிருந்து மீண்டாள்
உயிர்த்தது அன்பு நெஞ்சம்
உணர்வுகள் மோதி மோதிப்
பனித்தன கண்கள் நீரை
பார்த்திட்ட சாந்தி நொந்து
''எனக் கொன்று மில்லை துன்பம்
எதற் கென'' முறுவலித்தாள்.

அருகினில் குழந்தை வந்து
ஆவலாய் முகத்தைப் பார்த்து
அம்மாவுக் கென்ன? என்று
அறிந்திட ஏதோ கேட்கும்:
''அம்மாவுக் கெல்லாம் சுகம்
அப்படி என்ன'' என்று
அணைத்திடும் தாய்மையுள்ளம்
அன்புடன் முத்தமீயும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் நலக்குறைவு கண்டு
தடைப்பட்டு விடுமோ தொண்டு
என்றுள்ளத் துன்னிச் சாந்தி
ஏங்கியே மனந் துடிப்பாள்:
தன்னுள்ளே துன்பமெல்லாம்
தாங்கி அப் பெண் நிலவாள்
இன்னொளி பரப்பிக் கொழுநன்
இலட்சியம் மலரச் செய்வாள்:

குலப் பண்பால் உயர்ந்தொளிரும்
கொடி முல்லை ஆனுள் சாந்தி
நலப் பண்பால் உயர்ந்துணர்வில்
நர்த்தனஞ் செய்வாள்; செழுங்
கலைப் பண்பின் ஊற்றுக்கண்ணுய்க்
காவியப் பெண் சுடராய்
எதைச் சொன்னு லென்ன காந்தனுக்
கெல்லாமே சாந்தி! சாந்தி!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவுலகில் சாந்தி

நெஞ்சத்தை நினைவலைகள்
நிரப்பி நிற்க
நீங்காத ஆசையெல்லாம்
திரண்டெழுந்து
சஞ்சரிக்கக் கனவுலகில்
சாந்தி சென்று
தனைமறந்து சிலையானாள்
சற்று வேளை.

மங்கலமாய் அலங்கரித்த
மண்டபத்தே
மாந்தர் பலர் சேர்ந்திருந்தார்
மகிழ்வு பொங்க
எங்கிருந்தும் பல அறிஞர்,
கலைஞர் வந்து
இனிய பெரு விழாக் காணக்
கூடி நின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியஞ் செய் கலைஞர்களின்
மத்தியிலே, தன்:
காதலனும் மலர்ச்சியுடன்
காட்சி தந்தான்:
மேவியெழும் இன்பமதால்
மெய் சிலிர்க்க
விழி பதித்து, சாந்தி அங்கே
வீற்றிருந்தாள்.

அன் பொளிரும் திருமகளாய்
மகள் கல்யாணி
அறிவுடனே அழகமைந்து
மலர்ந்திருந்தாள்:
இன்ப முகம் தந்தை முகம்
நோக்கி நோக்கி
இரு விழியில் அன்புணர்வை
ஏந்தி நின்றாள்.

''சீர் பெற்ற தீந்தமிழின்
இனிமை பூக்கத்
திறன் காட்டிச் சீர்த்த பண்பும்
நயமுங் காட்டிப்
பேர் பெற்ற நாவல் தனை
மாந்தர்க் கீந்த
பெருமை யெல்லாம் காந்தனையே
சாரும்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபமே அதிர்ந்தது
கை ஒலியினாலே
மனம் உவந்து வாய் திறந்து
மக்கள் வாழ்த்தக்
கண்டிருந்த சாந்தி நெஞ்சில்
மகிழ்ச்சி வெள்ளம்
கரை புரள ஆனந்தக்
கண்ணீர் விட்டாள்:

''இனிய பண்பும் தூய தொண்டும்
கொண்ட ஏந்தல்
எழுத்துக்கள் என்றென்றும்
வாழ்ந்திருக்கும்
கனிப்பிழிவாய்ச் சுவை சொட்டும்:
மக்கள் நெஞ்சைக்
கனியவைக்கும், கலங்கரையின்
ஒளியாய்க் காலும்:

வாழ்க்கையிலே மலர்ந்ததிந்த
நாவல்; மக்கள்
வாழ்வதனை மலர வைக்கும்
உயர்வைத் தேக்கும்,
பூக்களிலே குல மலர்கள்
தேன் பிலிற்றப்
புதுமையுடன் இதம் குலுங்கும்
பூங்கா ஆகும்''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையாற் சிறப்புற்றார்,
திறனே! என்றார்
திருப்புமுனை எழுத்துலகில்
என்றார், இன்னும்
வந்திருந்த அறிஞரெல்லாம்
புகழ்ந்து கூறச், சாந்தி
வைத்த விழி வாங்காது
மகிழ்வில் ஆழ்ந்தாள்.

நாவலிலே நயக்கின்ற
பாத்திரங்கள்
நம் உணர்வில் உயிரதனில்
கலந்து நின்று
காவியமாய் வாழ்வு மணம்
கமழச் செய்யும்
கவின் பொழியும், புது உலகிற்
கழைக்கு மென்றார்.

அடக்கமாய்ச் சபை நடுவே
எழுந்தான் காந்தன்,
அனைவருக்கும் நன்றி என்றான்
அன்பு பொங்க,
ஒடுக்கமாய் நின்று சில
வார்த்தை சொன்னான்
உள்ளத்தில் உணர்வலைகள்
ஓங்கி மோத:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் சிலைகளை
பரிணமிக்கக்
கலையுணர்வுக் கவின் விஞ்ச
அறிவு கொண்டு
ஞாலத்தின் மக்களினம்
வாழ்வடைய
நல்ல தொண்டு செய்திட்டார்"
என நவின்றீர்:

சொற் கடந்த உணர்வு தொட்டுத்
தோய்ந்து நிற்கும்
துடிப்பான நடை என்றீர்
இதற்கு மேலும்;
கற்பனைகள் கடந்த உயர்
மெய்ப் பொருளைக்
காட்டி நிற்கும் முறையாவும்
சிறப்பு என்றீர்:

அழிவற்ற தத்துவமாய்
வாழும் என்றும்
ஆற்றல் என்றும் ஏதேதோ
போற்றுகின்றீர்
ஒளி பெற்று இந் நாவல்
உங்கள் முன் உலவ
உதவியதோர் அன்புருவம்;
கூறக் கேள்மின்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற் பண்பின் ஆதார
சுருதியாக
நயம் நிறைந்த பொருட்சுவையாய்
மறைந்து நின்று
அற்புதமாய் எனை இயக்கி
நாவல் ஆக்க
ஆக்கமீந்தாள் என் துணைவி
சாந்தி! என்றான்.

விரிகதிரின் ஒளிக்கீற்றாய்
உணர்ச்சி பாய
விடுபட்டாள், கனவுலகில்
நின்று சாந்தி;
சிறு பொழுது தான் கண்ட
இன்பம் யாவும்
திரும்பிடவே வாராதா!
எனத் துடித்தாள்;

அன்பு மகள் கல்யாணி
ஓடி வந்து
அழகு முகம் புதைத்து நெஞ்சில்
கதைகள் கேட்க
இன்ப உணர் வெய்திய அத்
தாய்மை யுள்ளம்
ஏற்ற விடை காணாது
ஏதோ சொல்லும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தை உலகு

நிலவு என்னை அழைக்குதம்மா
நீந்தி அது எங்கும் போகுமுன்னே
உலவி வரப் போகிறேன், சற்று நேரம்;
உத்தரவு தந் தனுப்பிடம்மா;

எங்கே இருந்து நான் இங்கு வந்தேன்
எப்படி? யாரம்மா கொண்டு வந்தார்?
அங்கே என் தோழி கௌரியை, அவள்
அம்மா கொண்டு வந்ததாகச் சொன்னாள்:

சாந்தி மகளென்று சொல்லுகிறார் என்னை
சரியா அம்மா இந்தப் பேர் எனக்கு?
காந்தன் மிக மிக நல்லவரென்றும்
கதைக்கிறார் யாவும் நான் கேட்டேனம்மா:

புன்னை மரத்திலே சிட்டு வந்து
பூப்பறித்து விளையாடுதம்மா
என்னையும் பார்த்துக் கதைக்கு ததை
இங்கு வரும்படி கூப்பிடம்மா:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேகமேன் இப்படி ஓடுகுதே
வேலேயோ? என்ன அவசரமோ?
வேகமாய்ப் போகச் சிறகிருந்தால் இந்த
விண்ணெல்லாம் சுற்றித் திரிந்திடுவேன்:

கூட்டிலுள்ள கிளி தன்னை விடும்படி
கொஞ்சிக் கொஞ்சி என்னைக் கேட்கிறதே
வீட்டில் இருக்க மனமில்லையாம், அது
வெளியில் பறக்க விரும்புதம்மா;

விண் மீன்கள் கண்ணைச் சிமிட்டி சிமிட்டி
விளையாட்டுக் காட்டி ஒளிர எந்தன்
எண்ணமெலாம் அங்கு போய்வந்து மீளுது
எப்படி நான் அங்கு செல்வதம்மா?

குஞ்சுக் கோழி சோறு தின்ன மறுத்துக்
குதித்துக் குதித்துத் திரியுதையோ,
அஞ்சிடும் வேளையில் தாய்க் கோழி அதை
அணைத்துச் சிறகினுள் வைக்குதம்மா,

பக்கத்து வீட்டினில் தோழியரோடு
பந்து விளையாடி நின்றுலென்ன?
அப்பா வருமுன்னே வந்திடுவேன்
அவசர வேலை இருக்குதம்மா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் அப்பா எழுதுகிறார் என்ன
ஏதேதோ? ஒன்றும் புரியவில்லை.
இப்போதே நானும் எழுதிடப் பேனவை
எடுத்தே சற்றுக் கொடுத்திடம்மா,

பூக்கள் மலர்ந்து சிரித்துக் காற்றூடப்
புதுமணம் வந்து பரவுதிங்கே; அந்தப்
பூக்கள் வடிவினில் கொஞ்சம் தரும்படி
போய்க் கேட்க ஆசை பிறக்குதம்மா;

ஏற்ற புதுச் சட்டை பொம்மைக் கணிந்து
எனைப் போல் தலை சீவிக் கட்டவேண்டும்
மாற்றிப் புதுநகை போடவேண்டும் கொஞ்சம்
வந்து உதவிகள் செய்திடம்மா:

நிலவைப் பிடிக்க நான் கையை உயர்த்தி
நிலத்திலே நின்று குதித்தேனம்மா, அந்த
நிலவு என் கைக்கு வரவில்லை, என் கால்கள்
நிலைமாறக் கீழே விழுந் தெழுந்தேன்:

பட்டுச் சட்டை இரண்டும் பொம்மை ஒன்றும்
படங்களும் தோழிக்கு ஈந்தேனன்று
பாவம்; அவளிடம் ஒன்றுமில்லை யென்று
பார்த்தவுடனே தெரிந்து கொண்டேன்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகவிடு அம்மா என்னைச் சிறு வேளை
புதிய உலகை நான் பார்ப்பதற்கு, மாலை
ஆகுமுன்னே அழகுருவங்கள் தாங்கி நான்
ஆனந்த மாகத் திரிவதற்கே:

சின்ன நிலவாய் உன் முன் வருவேன்
சிரித்து நிற்பேன் புதுத்தேன் மலராய்:
வண்ணக்கிளியாக வந்து உன் கையில்
மகிழ்ந்திருப்பேன்; பழம் வாங்கி உண்பேன்.

காணாது போனால் அழுது வருந்தாதென்
காலடி பார்த்துத் தொடர்ந்திடம்மா,
ஆனா எழுதி எழுதிப் படித்து நான்
அங்கொரு மூலையில் ஆறி நிற்பேன்.

தெய்வமே! என் அம்மா அப்பா மற்றெல்லாரும்
சிறப்பாக வாழ்ந்திடச் செய்யும் என்றேன், அத்
தெய்வம் எனைப் பார்த்துச் சிரித்ததுகண்டு; என்
சின்ன இதயம் குளிர்ந்ததம்மா!

கொஞ்சும் குதலை மொழியினைக் கேட்டுக்
குழந்தை உலகை வியந்திடுவாள் சாந்தி,
விஞ்சும் மகிழ்ச்சிப் பெருக்கால் அதை அள்ளி
மெல்லத் தன் மார்போ டணைத்திடுவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மை கிளர்ந்து உணர்ச்சி பெருகிடும்
தங்க மகளின் புதுமைகளால்
தூய்மையிலே சுடர் தெய்வ வடிவிலே
சிந்தை கிறங்கச் செயல் மறப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்மைச் செயல்

மலர்ந்து வரும் புது உலகில் மக்களினம்
சீர் பெற்று வாழ்வதற்கு
உயர்ந்த பல அறிஞர்களின் கருத்தெல்லாந்
திரட்டி அறிவொளியை ஈந்து
சிறந்த பணி ஆற்றி நிற்கும் நூல் நிலையப்
பயன்களெல்லாம் சிந்தை கொண்டு
நிறைந்த மன உந்தலினுல் முனைந்து நின்ருன்
நூல் நிலையம் நிறுவுதற்கே:

எப்பொழுதும் நல்லனவே செய்கின்ற
காந்தனது இயல்பு நோக்கிச்
செப்பமுற அறிந்ததனைச் செயற்படுத்த
அவாவுற்ருள் சாந்தி சேர்ந்து:
''இப்பொழுதே நும் முயற்சி வெற்றிபெற
எம் ஆசி'' என்ருர் நல்லோர்:
செப்பமுற நூல் நிலையம் திகழ்வதற்கு
வேண்டியன தேர்ந்து நின்ருன்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடையார் கை கொடுத்து ஆதரவாய்
நன்மைச் செயற்காக்க மீந்தார்.
இன்புடனே அவன் நெஞ்சம் எச்சுமையும்
தாங்கியது இப் பணிக்காய்:
துன்பமெது வந்திடினும் தொட்ட பணி விடா
ததனைத் தொடர்ந்து செய்ய
என்றும் அவன் நீர்மைக்கு ஏற்ற துணையாம்
சாந்தி எழுச்சி ஆனாள்!

சிந்தனையால் உண்மை நிலை தேர்வதற்கு
வாழ்க்கையிலே திறவு கோலாய்
வந்துதவி யீந்து வழிகாட்டி நிற்கும்
நூற் செல்வ மாண்பு என்னே!
இந்த உலகோம்பிடவே என்றும் நிலை பொன்று
விழுச் செல்வமாகி; வாழ்வு
தந்து நிற்கும் நூல் அறிவுச் சிறப்பறியார்
அறிவினிலே தாழ்வுற்றாரே!

உள முவக்கும் கல்வியறி வில்லாத ஊரும்
ஒரு ஊரா மன்றோ?
வள மிருந்தும் பெரும் மக்கட் பல மிருந்தும்
போதுவதோ? வாழ்க்கை இன்ப
நலம் சிறந்து ஓங்குவது நல்லறிவு
உயர் பண்பு நயத்தா லன்றோ!
உளம் சிறக்க உதவுகின்ற கருந்தனமாம்
கல்வி, இதை உணரார் யாரே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள் அகற்றும் ஒளி விளக்காய் இலங்குகின்ற
நூல் நிலையம் எழுப்புதற்காய்ப்
பொருள் அளித்தான், பணமளித்தான் போதாது
என்றுணர்ந்து தேவை கண்டு
அருள் மனத்தார் உதவி யெல்லாம் அன்புடனே
ஏற்று நின்றன் அதற்கு மேலால்;
பரிவுடனே சாந்தி தனதுடமையெலாம்
உவந்தளித்தாள் நற் பணிக்கே!

தொடர்ந்த தந்த நூல் நிலைய வேலையெலாம்
துணி வொன்றே துணையதாக:
தடங்கலின்றி அவர் முயற்சி வளர்ந்ததரும்
பண்பார்ந்தோர் தகைமை போல
அடங்கலின்றி ஆர்வம் முந்தத் தம் நோக்கை
முழுமையதாய் அடைய வேண்டித்
தொடர்ந்து சென்ருர் மென்மேலும் உய்வழிகள்
திறந் துவக்கும் தூய நெஞ்சோர்!

செயற்கரிய செயல் இயற்றிச் செம்மாந்த
சான்ருேர்கள் வாழ்வின் இன்பம்:
இயற்கை பொழி எழில் மலிந்த இன்பம் போற்
சேவை தனில் இன்பங் கண்டு
முயற்சியுடன் அறிவளிக்கும் முதற் பணியில்
தமை மறந்து முனைந்து நின்ருர்:
மகிழ்ச்சியுடன் நல்லோர்கள் முகம் மலர்ந்து
உளமுவந்து வாழ்த்துக் கூற:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுழைப்பை அளித்தளித்துப் பெண்மை பெரு
    நிறைவு கொள்ளும்; ஆண்மை நெஞ்சோ
இன்னமுதாய்ப் பொங்கும் உணர்விழையோடும்
    தன் துணையின் இயல்பைப் போற்றும்;
தன்னைவிட உயர்ந்துவிட்டாள் சாந்தி!
    அவள் புரிகின்ற தியாகத்தாலே:
என்னே! இப் பெண்மைக்குள் இருக்கின்ற
    சக்தி! என இறும்பூ தெய்தும்:

அயராத உணர்வுந்த அன்பு வழிச்
    செயல்கள் பல ஆற்றும் சாந்தி
செயலாகும் தன் நினைவு முழு நிறைவு
    காண்பதற்குச் சற்று முன்னே
புயலாகப் பரவி வந்த பெருங் காய்ச்சல்
    பிணி அவளைப் பிடித்து வாட்ட
இயலாது பெருந் துன்பப் பாயுற்றாள்; அவனோ
    துடித் தேங்கி நின்றான்:

மணம் முடித்த நாள் முதலாய் அன்பிதயம்
    மலர்ந்து நறு மணஞ் சுரந்து
குணம் தோய்ந்து ஒருயிராய்க் குலவுகின்ற
    பூங்கொடியாள் துன்பங் கண்டு
இனம் புரியா வேதனைகள் அடர்ந்தெழுந்து
    திரண்டு அவன் இதயம் தாக்க
மனங்கலங்கி மிக நொந்தான்; இரு கண்ணும்
    நீர் அரும்பி வழிந்ததம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழும் சாவு

வெந்தழலில் பொன்னுருகி நெளிவதைப்போல்
வேதனைகள் மத்தியிலே நெளிந்தாள் சாந்தி;
வந்திருந்த வைத்தியர்கள் துன்பம் நீக்க
வாய்ந்த பல மருந்துவகை தேர்ந்தளித்தார்;
சொந்தமென்று இவ்வுலகில் உள்ள அன்புத்
துணைவி துயர் சகிக்காது துவண்டான் காந்தன்;
எந்தனம்மா! என்றழுதாள் மகள் கல்யாணி
எடுத்தணைத்தான்: இருந்தவர்கள் இரங்கி நின்றார்:

பேசுதற்குச் சக்தியில்லை; பேச்சைமீறிப்
பெருகி வரும் உணர்ச்சியெல்லாம் விழியில் தேக்கி
ஆசையுடன் கண் விழித்து மெல்லப் பார்த்தாள்;
அருகினிலே உயிர்த்துணைவன், அன்பு மகள்
பாசமென்ற உணர்வு பொங்கப், பதறி நின்றார்.
பரிவு கொண்டோர் வெய்துயிர்த்துப் பரிதபித்தார்,
பேசும்சொற் கடந்து பொருள் முடிந்த நிலை;
பெருகிடும் கண்ணீர்த் துளி உணர்வின் பிழிவோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் மணி ஓசை ஆர்த் தெழுந்து
அசைந்து வந்து தென்றலுடன் இதயம் தாவ,
நீல நிற வான் பரப்பில் ஒளித்திரள்கள்
நிறைந்து நின்று நித்தியத்தின் சுடரை வீச,
கால மெல்லாம் காந்தனுயிர் இணைந்த அன்புக்
கண்மணியாள் துயர் கண்டோர் கண்ணீர் மல்க;
கோல எழிற் கொழுந்தாகச் சாந்தி ஆன்மா
கூடு விட்டு வானுலகிற் கலந்த தம்மா!

ஏற்ற இசை மீட்பதற்கு முன்னே நல்ல
இதய வீணை நரம் பொடிந்து சிதைந்த வாறே!
காற்று வந்து அகல் விளக்கை அணைத்தவாறே!
காதல் வாழ்வின் உயிர்த்துடிப்பே மறைந்ததையோ!
நேற்று வரை நின்றிருந்த இன்பம் மாறி
நெகிழ்ந்து துன்பப் புனலாக நெஞ்சம் பாய
ஆற்றலிழந் தலமந்து அன்பை எண்ணி
அமைதியின்றித் துணைபிரிந்த அன்றில் ஆனான்!

“இனிய குலப் பண்பேந்திக் காதன்மையோ
டிணைந்து நலன் பொழிந்து பிறர்க் கின்ப மீயும்
கனி குலுங்கும் கற்பகமே! எந்தன் வாழ்வின்
காவியமே! எமைப்பிரிந்து சென்றாய்! எங்கே?
இனி எமக்கு ஆதரவு யார்? இதுதான் வாழ்வோ?
இன்னுயிரே! என்வாழ்வே! அன்பே!” என்று
தனிமையிலே புலம்பி அழுதிதயம் நொந்தான்
சாந்தி அவன் உள்ளுணர்வில் சங்கமித்தாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அம்மா எங்கே? ஏன் ஏகிவிட்டாள்?
இருக்கின்ற இடம் ஏது? என்று ஏங்கித்
தன் அம்மா இருந்த இடம் பார்த்துப் பார்த்துத்
தயங்கி அழும் குழந்தைக்குத் தந்தையுள்ளம்
என்ன சொல்லித் தேற்றி நிற்கும்; பிஞ்சு நெஞ்சில்
எழுந்துயரம் எப்படித்தான் அடக்கிநிற்கும்,
'உன் அம்மா இறந்து விட்டாள் அவளின் அன்பு
உயிர் இங்கே நீ! மகளே!' என்றணைப்பான்.

திரும்பாத உலகிற்குச் சென்ற சாந்தி
தியாகத்தின் சுடராக ஒளிர்ந் துயர்ந்தாள்;
பெரும் அன்புப் பித்தாகி மனம் அலையப்
பிரிவோ உள்நின் றுடற்ற நெட்டுயிர்ப்பான்:
இருந்தென்ன? என்ற நிலை வந்து மீளும்
இதயத்தைப் பிளந்து நிற்கும்: இருந்தும் என்ன?
துரும்பாக உணர்வு துன்பப் புயலில் ஆழத்
துயர் பெருக நீர்த்துளியைத் துடைத்து நிற்பான்.

மலரிதழ்கள் குலவிஎழும் புன் சிரிப்பு
மனத்திரையில் நின்று இன்னும் மறையவில்லை;
கலகலென்று சிரித்து உளம் களிக்கும் பேச்சு
காதில் வந்து ஒலிக்கும்; எங்கிருந்தோ கேட்கும்.
சில பொழுது சாந்தி உயிர்ச் சிலை வடிவாய்
சிரித்து நிற்பாள் அகக் கதவைத் திறப்பாள் மெல்ல:
நிலையிழந்த நல்லோன் இச் சபலம் சற்றே
நீங்கியதும் 'நிலையாமை' நினைந்து நைவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மகளைப் பொன்மகளாய்க் காண எண்ணி,
தாய் அன்பைச் சொரிந்து தனதுயிருள் வைப்பான்:
''என் மகளே! பெண் இனத்தின் எழில் மலராய்
இலங்கிடம்மா!'' என்று அன்று சாந்தி சொன்ன
பொன் மொழிகள் பிஞ்சிதயம் நின்றொலிக்க,
பெற்ற தந்தை மனங் குளிரத் திருமலராய்ச்
சின்ன மகள் கல்யாணி வளர்ந்தாள்; தாய்மை
தெய்வமாய் மறைந்து நின்று ஆசி ஈய:

''ஏற்றுங்கள் தூய பணி எதிலும் என்றும்
இணைந்திடுவேன் உங்களுடன் எழுவேன்'' என்று
சாற்றி நின்றாள்; அவன் நினைவில் செறிந்து,
அருமைச் சாந்தி குரல் ஒலி கேட்டு வெய்ய துன்பம்
மாற்றுதற்கு, கடமைகளை மனதிற்கொண்டான்.
வாழ்வில் நிறைந் தவள் உணர்வு இசை எழுப்ப;
ஆற்றிடவே முனைந்து நின்றான் தொடர்ந்த தெல்லாம்
அவன் ஆன்ம சாந்திக்கு! சாந்திக்காக!

பரந்து வந்த செய்தி ஒன்று விரைந்து காதிற்
பட்டதுதான்; இறைவா! என் அன்புச் சாந்தி
இறந்த பின்பா இது வந்த தென்றான்! அவன்
இதய மெல்லாம் அருள்வீச்சு! உயிர்க் கிளர்வு!
சிறந்த பெரும் நாவல் பெறும் பரிசு வந்து
சேர்ந்தது காண்! காந்தனுக்கே! திறனின் சிறப்பே!
மறைந்த அன்புச் சாந்தி மனக் கண்ணில் தோன்றி
வாழ்த்தினாள்! அவன் கழுத்து மாலையானாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நிமிடம் தனைமறந்தோர் உலகிற் சென்றுன்
ஊர் வலமும் வாழ்த் தொலியும் பரந்து ஓங்க
திரண்ட மக்கள் சிந்தை நின்று உணர்வு பாய,
''திறப்புவிழா'' நூல்நிலையம், சிறப்புக் கண்டார்.
அருங் குணத்தார் அன்பர் பல அறிஞர் கூடி
அமர்ந்திருந்தார், சொற்பொழிவு ஆற்றி நின்றுர்:
பெருங் குணத்தாள் சாந்தி பெயர் பெற்றுயர்ந்து
பெருமையோ டிலங்கிய தந்நூல் நிலையம்!

"அறிவு நிலை தழைத்திடவே காந்தன் தன்னை
அர்ப்பணித்து இந்நூல் நிலையம் அமைத்து ஈந்தார்.
பெருதுவந்து தன் பரிசுப் பணம்முழுதும், இப்
பெருந் தொண்டிற்கே அளித்தார்: பெற்றி என்னே!
உறுதுணையாய் நின்றுழைத்து மடிந்த தியாக
உத்தமியாள் சாந்தி பெயர் தாங்கி நின்று
அறிவொளியைக் காலமெல்லாம் அள்ளி வீசி
அரும்பணிக ளாற்றுமென் றறைந்தார்!" சான்றேர்.

''காதல் நெஞ்சம் தோய்ந்த பெண்மை வீறுஎய்திக்
கனிந்த திந்த நூலகமாய்க் கண்ணின் முன்னே!
சாதல் இன்றி வாழுகின்ற காதல் பெறும்
தகவிதுவோ!'' என உணர்வு ததும்பச் சொன்னுர்:
ஈதல் பிறர்க் கினியனவே செய்துவத்தல்
இவை யன்றி உயிர்க்கின்பம் இல்லை என்றே
ஆதல் எல்லாம் சிறப்புறவே ஆகத், தன்னை
அளித் துயர்ந்த பெண்மை மகத்துவம் புகழ்ந்தார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலை யெறிந்து உணர்ச்சி பிரவாகித்தோட
அறிஞர்களும் பெரியாரும் வாழ்த்துக் கூறக்
கலைமதியாம் காந்தன் எழுந்தவர் மத்தியில்
கண்கலங்கிச் சில வார்த்தை பேசுமுன்னே
நிலையறிந்து மீண்டும் சுய உணர்வு பெற்று
நினைவதனைச் செயற் படுத்த விழைந்து நின்றான்:
விலைமதியாக் கலைவாழ்வின் உயிர்ச் சுவையாய்
வீற்றிருந்த சாந்தி விண்ணின் சுடராய் நின்றாள்!.

UNIVERSITY OF CEYLON
JUN
LIBRARY

MICROFILMED
Positive
Negative
Reel No: 11063
Date: 7/11/91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

E94 S11·17

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Class No..................

Acc. No...................

This book is returnable on or before the last date stamped below.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
-4 JUN
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

275526

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org